**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

**பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வியாண்டு 2011/2012**

2011இல் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் ஏற்கனவே விண்ணப்பங்களை பல்கலைக்கழக அனுமதிக்காக அனுப்பிய அபேட்சகர்களுக்கு, அவர்கள் தெரிவு செய்த பல்வேறு பாடங்களின் விருப்ப ஒழுங்கு வரிசையில் மாற்றத்தைச் செய்ய விரும்பினால் மற்றும் புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அவர்களை அனுமதிப்பதென்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

விருப்ப ஒழுங்கு வரிசையில் மாற்றத்தைச் செய்ய விருப்பமுள்ளவர்கள் மற்றும் புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் கீழே தரப்பட்டுள்ள படிவ அமைப்பின் படி எழுதி மேலதிகச் செயலாளர் (கல்வி அலுவல்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20,வாட் இடம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு **28 செப்டம்பர் 2012 திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கத்தக்கதாக பதிவு உறையில் அனுப்பி வைக்கவும்.

**28 செப்டம்பர் 2012 ஆம் திகதிக்கு பின்னர் கற்கைநெறி ஒழுங்கு மாற்றத்திற்கான மற்றும் புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான எந்தவொரு வேண்டுகோளும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.**

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
විශ්වවිද්‍යාල ප්‍රවේශය අධ්‍යයන වර්ෂය 2011/2012
[2011 අ.පො.ස.(උ.පෙළ) විභාග ප්‍රතිඵල මත]

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**பல்கலைக்கழக அனுமதிகள் - கல்வியாண்டு 2011/2012**
**[க.பொ.த. (உ/த) 2011இன் அடிப்படையில்]**

**UNIVERSITY GRANTS COMMISSION**
**UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2011/2012**
**[Based on the results of the G.C.E. (A/L) Examination held in 2011]**

කැමැත්තේ අනුපිළිවෙළ වෙනස් කිරීම සහ නව පාඨමාලා අයදුම් කිරීම සඳහා ආදර්ශ අයදුම්පත්‍රය
**கற்கைநெறி ஒழுங்கை மாற்றுவதற்கான மற்றும் புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி படிவ அமைப்பு**
**Format for Change the order of Course Preferences and to apply for new courses of study (Specimen)**

1. අ.පො.ස (උසස් පෙළ) විභාග අංකය (2011) :
க.பொ.த. (உ/த) சுட்டெண் (2011):
G.C.E. (A/L) Index Number (2011): | | | | | | | |

2. සම්පූර්ණ නම :
முழுப்பெயர்:
Full Name :

3. ජාතික හැඳුනුම්පත් අංකය :
தேசிய அடையாள அட்டை இல.:
National Identity Card No. :

දුරකථන අංකය :
தொலைபேசி இலக்கம்:
Telephone Number :

Course of Study (Code)

Order of University Preference (University Code)

| 1 | | | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | | | |
| 14 | | | | | | | | | | | | |
| 15 | | | | | | | | | | | | |
| 16 | | | | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | | | |
| 18 | | | | | | | | | | | | |
| 19 | | | | | | | | | | | | |
| 20 | | | | | | | | | | | | |
| 21 | | | | | | | | | | | | |
| 22 | | | | | | | | | | | | |
| 23 | | | | | | | | | | | | |
| 24 | | | | | | | | | | | | |
| 25 | | | | | | | | | | | | |

මා විසින් මීට පෙර සඳහන් කරන ලද කැමැත්තේ අනුපිළිවෙල අවලංගු කර ඉහත මා සඳහන් කරන නව කැමැත්තේ අනුපිළිවෙල විශ්වවිද්‍යාල ප්‍රවේශය සඳහා සලකා බලන ලෙස කරුණාවෙන් ඉල්ලා සිටිමි. இத்தால் நான் எனது முந்திய கற்கைநெறி / பல்கலைக்கழக விருப்பு ஒழுங்கை ரத்து செய்கிறேன். தயவு செய்து மேலே குறிப்பிட்ட புதிய கற்கைநெறி / பல்கலைக்கழக விருப்பு ஒழுங்கை எனது புதிய விருப்பு ஒழுங்காக கருத்திற்கெடுக்கவும். I do hereby cancel my previous course/university preferences. Please consider the new order of course/University preference as indicated above for university admission.

.................................. ..........................................................

*දිනය/திகதி* / **Date** අත්සන/கையொப்பம்/ **Signature**

மேலதிகமாக, 2011இல் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் கல்வியாண்டு 2011/2012இற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காத அபேட்சகர்களுக்கு விண்ணப்பப் படிவங்களை விநியோகிப்பதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

**முக்கியம்**
**2011இல் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் கல்வியாண்டு 2011/2012இற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த அபேட்சகர்கள் இன்னுமொரு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய அவசியமில்லை.**

கீழே (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள், விண்ணப்பிக்க விரும்பினால் **14 செப்டம்பர் 2012 முதல் 28 செப்டம்பர் 2012 வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகம், இல.20, வாட் இடம், கொழும்பு 07** இல் ரூபா 300/= தொகையை (பணமாக) செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலுடன் விநியோகிக்கப்படும் விதித்த விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைப் தபால் மூலம் **14 செப்டம்பர் 2012 முதல் 26 செப்டம்பர் 2012 வரை** பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைப் தபால் மூலம் பெறுமிடத்து விண்ணப்பதாரி ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் இந்நோக்கத்திற்காக கொடுப்பனவுப் பட்டோலையை நிரப்பி, இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் இலங்கை வங்கியின் சுதந்திரச் சதுக்க கிளையிலுள்ள ப.மா.ஆ. திரட்டுக் கணக்கு இலக்கம் 0002323287 இன் அல்லது மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையிலுள்ள திரட்டுக் கணக்கு இலக்கம் 167-1-001-4-3169407 இன் வரவிற்கு ரூபா 300/= பணம் வைப்பிலிட வேண்டும். விண்ணப்பப் படிவத்திற்கான ஒவ்வொரு வேண்டுகோளுடனும் மேற்கூறிய வங்கிகளில் ஒன்றின் இலச்சினை பொறிக்கப்பட்டு அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் முறையாக ஒப்பமிடப்பட்ட கொடுப்பனவு பட்டோலையின் அடிக்கட்டையினையும் இணைத்து அனுப்ப வேண்டும். **தபால் கட்டளை மற்றும் காசுக் கட்டளை (Postal Orders and Money Orders) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதைத் தயவு செய்து குறித்துக் கொள்ளவும்.

தபாலில் விண்ணப்பப்படிவம் கோரும் ஒவ்வொரு வேண்டுகோளுடனும் விண்ணப்பதாரியின் பெயர், பல்கலைக்கழக அனுமதிக்கான நடைமுறை பற்றிய கைநூலைப் பெற விரும்பும் மொழி ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒரு கடிதம் மூலம் மேலதிகச் செயலாளர் (கல்வி அலுவல்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வாட் இடம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். அத்துடன் சுய முகவரியிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான 35செ.மீ x 24செ.மீ அளவுக்குக் குறையாத கடித உறையொன்றையும் அனுப்புதல் வேண்டும்.

**(அ) பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள்**
பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தகுதியானோர் என்று அறிவிக்கப்பட்டு பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளைக் கொண்டவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்:

(அ) சகல மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி (S), அத்துடன்
(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள்

**குறிப்பு 1:** மேலே (ஆ)இல் குறிப்பிட்ட தேவையைத் திருப்தி செய்யாததால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தகுதியற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்ட பரீட்சார்த்திகள், அத்தேவையை முந்திய தடவை/தடவைகளில் பூர்த்தி செய்திருந்தால் அல்லது பல்கலைக்கழக அனுமதிக்கு கருதப்படும் மூன்று தடவையிலான காலப்பகுதிக்குள் பிந்திய க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பூர்த்தி செய்வார்களாயின் மட்டுமே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு 2:** 2010ம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையின் மீது, 3 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் ஒரு நிறுவகத்தில் உயர் தேசிய டிப்ளோமாவுக்கு (HND) இட்டுச் செல்லும் கற்கை நெறிக்கு அல்லது தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தில் இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) போன்ற கற்கை நெறி ஒன்றினை முழுநேர மாணவர்களாக பயில்வதற்கு பதிவு செய்துள்ள மாணவர் ஒருவர், பதிவு செய்வதற்கான கடைசித் தினத்திலிருந்து 60 நாட்களைக் கொண்ட காலமொன்றினுள் தமது பதிவை அவர் மீளப்பெற்றிருந்தால் மட்டுமே பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தோடு பதிவை ரத்துச் செய்தது பற்றி சம்பந்தப்பட்ட நிறுவகம் வழங்கிய கடிதத்தின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டும்.

இத்தால் குறிப்பிடப்பட்டுள்ள 60 நாள் சலுகை மேலே குறிப்பிடப்பட்டுள்ள உயர் கல்விசார் நிறுவனங்களுக்கு வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்படுகின்ற தேருனர்களுக்கு வழங்கப்படமாட்டா.

**விண்ணப்பங்களின் முடிவுத் திகதி**

**விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 28 செப்டம்பர் 2012 ஆகும்.** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மேலதிகச் செயலாளர் (கல்வி அலுவல்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிகள்), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,இல. 20, வாட் இடம், கொழும்பு – 07 என்ற முகவரியில் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். **28 செப்டம்பர் 2012ஆம் திகதியின் பின் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வாட் பிளேஸ்,
கொழும்பு 07.
14/09/2012